# 108 திவ்யதேச ஸ்தலங்கள்



# 38. திருவெள்ளக்குளம் (அண்ணன் கோவில்)



[Google Maps]

**கல்லால் கடலையணைகட்டி யுகந்தாய்**
**நல்லார் பலர் வேதியர் மண்ணிய நாங்கூர்**
**செல்வா, திருவெள்ளக் குளத்துறைவானே**
**எல்லா இடரும் கெடுமா றருளாயே – (*1313*)**

பெரிய திருமொழி 4-7-6

என்று திருமங்கையாழ்வாரால் பாடப்பட்ட இத்தலம் சீர்காழி தரங்கம்பாடிச் சாலையில் அமைந்துள்ளது. சீர்காழியிலிருந்து சுமார் 8 கி.மீ. தூரம். திருநாங்கூர் பதினொரு திருப்பதிகளில் இதுவும் ஒன்று.

## வரலாறு

திருவெள்ளக்குளம் என்ற சொல் இத்தலத்தின் முன்புறம் அமைந்துள்ள ஸ்வேத புஷ்கரணியால் உண்டாயிற்று. ஸ்வேதம் என்றால் வெண்மை. எனவே ஸ்வேத புஷ்கரணி வெள்ளைக்குளமாகி, வெள்ளக்குளமாயிற்று.

முன்னொருகாலத்தில் சூர்ய வம்சத்தைச் சார்ந்த துந்துமாரன் என்னும் மன்னனுக்கு சுவேதன் என்றொரு புத்திரன் இருந்தான். அவனுக்கு 9 வயதில் மரண

கண்டமென்றும் அதிலிருந்து மீள முடியாதென்றும் சாஸ்திர வாதிகளால் தெரிந்த மன்னன் அதற்குப் பிராயசித்தம் காண தன்குல குருவான வசிட்டரை அணுகினான். அவர் இவ்விடத்திற் சென்று (ஆயுள் விருத்தி) மந்திரஞ் ஜெபித்து மரண கண்டத்தை வெல்லுமாறு கூறினார்.

எனவே இவ்விடம் வந்த சுவேதன், இங்கு தவம் செய்து கொண்டிருந்த மருத்த முனிவரின் ஆஸ்ரமத்தை அடைந்து மந்திரப் பயிற்சிப் பெற்று தடாகத்தின் தெற்கில் வில்வ மரத்தடியில் வடக்கு முகமாயமர்ந்து ஆயுள் விருத்தி மந்திரத்தை ஜெபித்து (ஐப்பசிமாதம் வளர்பிறை தசமி முதல், கார்த்திகை மாதம் வளர்பிறை ஏகாதசி வரை ஒரு மாதம்) கடுந்தவமியற்ற சிறுவனின் தவத்தை மெச்சிய மஹாவிஷ்ணு அவனுக்கு காட்சி கொடுத்து மரண கண்டத்தை இல்லாததாக்கி மார்க்கண்டேயனைப் போல நீடித்த ஆயுளை நல்கினார்.

இவ்விதம் சுவேதன் பகவானின் அருள் பெற்றதால் ஸ்வேத புஷ்கரணி என்றாகி தமிழில் வெள்ளக்குளம் ஆயிற்று.

**ச்வேத வத்ஸ சிரஞ்சீவிந் ஜிதோ ம்ருத்யுஸ்தவயா அதுநா**
**ம்ருக்யுஞ்ஜயேன மந்த்ரேண ப்ரிதோஸ்மி தவஸி வ்ரத**
**தீர்க்கமாயு ப்ரதாஸ்யாமி கல்பாந்தஸ் தாயி தேந்நாப**
**விநோசோ ந பவேத்தாத மார்க்கண்டேயே ஸமோவப**

**- என்பது புராணம்.**

திருமங்கையாழ்வார் வேங்கடவனையே இத்தலத்தில் காண்கிறார். வேங்கடவனே இத்தலத்தில்

எழுந்தருளியிருப்பதாகவும், திருப்பதி ஸ்ரீனிவாசனுக்கு இப்பெருமானை அண்ணன் எனவும் விளிக்கிறார். திருமங்கையாழ்வார் தமது துன்பங்களைப் போக்குமாறு கீழ்க்கண்டவாறு வேங்கடவனை வேண்டுகிறார்.

**கண்ணார் கடல் சூழி லங்கை இறைவன்றன்**
**திண்ணாகம் பிளக்கச் சரஞ்செல வுய்த்தாய்**
**விண்ணோர் தொழும் வேங்கட மாமலை மேய**
**அண்ணா, அடியேனிடரைக் களையாயே - *1038***

என்று திருப்பதி வேங்கடவனை அண்ணா என்றழைத்து தன் துன்பத்தைப் போக்குமாறு வேண்டுகிறார்.

திருவெள்ளக்குளத்துப் பெருமாளை வேண்டும்போது கண்ணார் கடல் போல் என்ற சொற்றொடராலேயே மங்களாசாசனத்தை ஆரம்பித்து இப்பெருமாளையும் அண்ணா அடியேனிடரைக் களையாயே என்கிறார்.

இதோ அப்பாடல்,

**கண்ணார் கடல்போய் திருமேனி கரியாய்**
**நண்ணார் முனை வென்றி கொள்வார் மன்னு நாங்கூர்**
**திண்ணார் மதிள்சூழ் திருவெள்ளக்குளத்துள்**
**அண்ணா, அடியேனிடரைக் களையாயே - *1308***

திருவேங்கிடமுடையானிடத்தில் அடியேனிடரைக்களையாயே என்று முன்னமே தன்னால் வேண்டப்பட்டது திருவெள்ளக்குளத்து ஸ்ரீனிவாசனால் நிறைவேறினமையால் அவருக்கு இவர் அண்ணாவாயிற்றார்.

திருமங்கை வேறு எந்தப் பெருமாளையும் அண்ணா என்றழைத்தாரில்லை. முதலில் திருமலைவேங்கடவனை அண்ணா என்று விட்டு அதற்குப் பிறகு இப்பெருமாளை அண்ணா என்றதால் அவருக்கு இவர் அண்ணனானார். அதாவது வேங்கடவனை அண்ணா என்றழைத்த இவர் அதற்குப் பிறகு தமது மங்களாசாசனம் முற்றிலும் வேறு எவரையும் அண்ணா என்றழைக்கவில்லை. திருவேங்கடத்திற்குப் பிறகு இவரை மட்டுமே அண்ணா என்றதால் அந்த அண்ணாவுக்கு இவர் அண்ணனானார்.

அண்ணன் குடி கொண்ட கோவில் அண்ணன் கோவிலல்லவா. அதனால் தான் திருவெள்ளக்குளத்திற்கு அண்ணன் கோவில் என்றும் பெயருண்டாயிற்று. அண்ணன் கோவில் என்னும் சொல்லே இங்கு பிரதானமாக விளங்கி வருகிறது.

அவர்மேல் மங்கையுறை மார்பா என்று நம்மாழ்வார் வேங்கடவனை விழிக்கிறார். திருமங்கையாழ்வார் இப்பெருமானை பூவார் திருமகள் புல்கிய மார்பா என்றழைக்கிறார். அதாவது வேங்கடத்து ஸ்ரீனிவாசனுக்கும் பிராட்டிக்கும் உள்ள தொடர்பை வெள்ளக்குளத்து அண்ணாவுக்கு வழங்குகிறார். அம்மட்டுமன்றி இப்பெருமாளைத் திருமங்கையாழ்வார் வேடார் திருவேங்கடமேய விளக்கே என்று விளித்து வேங்கடவனுக்கும் இவருக்கும் உள்ள தொடர்பை விரிவுபடுத்துகிறார்.

மேலும் வேங்கடவனை மங்களாசாசனம் செய்து முடிக்கும்போது “கலியன் சொன்ன மாலை வல்லாரவர்

வானவராகுவார் தாமே" என்று சொல்லி முடித்தார். இவ்வூரிலிருக்கும் அண்ணாவைச் சொல்லும்போது "கலியன் சொன்ன மாலை வல்லரென வல்லவர் வானவர் தாமே" என்று கூறி அவருக்கிவர் அண்ணா என்றே தலைக்கட்டி விடுகிறார்.

## மூலவர்

அண்ணன் பெருமாள். கிழக்கு நோக்கி நின்ற திருக்கோலம்.

## தாயார்

அலர் மேல் மங்கை

## உற்சவர்

ஸ்ரீனிவாசப் பெருமாள்

## உற்சவர்

பத்மாவதித் தாயார் பூவார் திருமகள்

## விமானம்

தத்வத் யோதக விமானம்

## காட்சி கண்டவர்கள்

சுவேதன்

## சிறப்புக்கள்

1) திருமலையில் பெருமாளுக்குரிய திருநாமமான ஸ்ரீனிவாசன் என்பதும் பிராட்டியின் திருநாமமான அலர்மேல் மங்கைத் தாயார் என்பதும். அதே பெயர்களில்

வழங்கும் இன்னொரு திவ்ய தேசம் 108 இல் இது ஒன்றுதான். வேங்கடத்தானுக்கு வெள்ளக்குளத்தான் அண்ணன் என்பது ஐதீஹமாவதால் திருப்பதிக்கு வேண்டிக் கொண்ட வேண்டுதலை இங்கே செலுத்துவது ஒரு மரபாகவே விளங்கி வருகிறது. எனவே இதனைத் தென்திருப்பதி என்றும் பகர்வர்.

2) இந்த ஸ்வேத புஷ்கரணியில் உள்ள குமுத மலர்களைக் கொய்து செல்ல தேவகுலப் பெண்கள் இங்குவருவது ஒரு காலத்தில் வழக்கமாயிருந்ததாம். அவ்வாறு ஒரு சமயம் வந்த தேவகுலப்பெண்களில் மானிடப் பார்வைக்கு இலக்காகி இங்கேயே நின்று விட்ட குமுதவல்லியைத்தான் திருமங்கையாழ்வார் திருமணம் செய்ய விழைந்தார். எனவே இத்தலம் குமுதவல்லியாரின் அவதார ஸ்தலம் என்பதோடுமட்டுமின்றி திருமங்கையாழ்வாரை இவ்வுலகிற்கு அளித்தமைக்கும் எல்லை நிலமாயிற்று.

அதாவது நீலன் என்ற பெயரில் படைத்தளபதியாகத் திகழ்ந்த திருமங்கை குமுதவல்லியைப் பற்றிக் கேள்விப்பட்டு பெண் கேட்டு வர, குமுதவல்லியார் ஒவ்வொரு நிபந்தனையாக விதித்து நிபந்தனைகளை நிறைவேற்றினால்தான் திருமணம் என்று சொல்ல இவரும் நிபந்தனைகளை நிறைவேற்ற ஈடுபட்டு, இறுதியில் ஆழ்வாரானார். ஒரு மங்கையினால் ஆழ்வாராக மாறினமையால் மங்கையாழ்வாராகி திருமங்கை ஆழ்வாரானார்.

3) திருமங்கையாழ்வாரால் மட்டும் பத்துப் பாசுரங்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட ஸ்தலம். பிள்ளைப் பெருமாளையங்காரும் இத்தலம் பற்றி பாடியுள்ளார்.

4) அழகிய மணவாள தாசருக்கு (மணவாள மாமுனிகட்கு) இறைவன் இங்கு காட்சி கொடுத்ததாக ஐதீஹம். மணவாள மாமுனி எம்பெருமானைத் தேட எம்பெருமான் மணவாள மாமுனியைத் தேட இருவரும் இங்குள்ள தடாகத்தே சந்தித்து விடாய் தீர்த்தனர் என்பர்.

5) திருமலையில் ஸ்ரீனிவாசப் பெருமாள் தனித்து நிற்கிறார். அந்தக் குறையைப்போக்கிக் கொள்ள இங்கு அலர் மேல் மங்கைத் தாயாருடன் சேர்ந்து காட்சி தருகிறார். இது ஒரு சிறப்பம்சமாகும்.

6) இத்தலத்தில் குமுதவல்லியாரும் கோவில் கொண்டுள்ளார்.

7) நம்பி என்றும், எம்பெருமானே என்றும் திருமாலை அழைத்து வந்த திருமங்கையாழ்வார் அண்ணா என்ற அழகு தமிழ்ச்சொல்லால் எந்த ஆழ்வாரும் சொல்லாத ஒரு புரட்சிகரமான சொல்லை இரண்டு ஸ்தலங்களின் ஸ்ரீனிவாசன்களுக்குச் சூட்டி மகிழ்கிறார்.

8) இது மக்கட்பேறளிக்கும் ஸ்தலமாகும். திருமண காரியங்களை இங்கு வேண்டிக் கொண்டால் சீக்கிரம் நிறைவேறும். ஆயுள் விருத்தியை அளிக்கக் கூடிய ஸ்தலமாகும். ஒரு பிரார்த்தனை தலம் போல வளர்ந்து கொண்டிருக்கும் இத்தலம் மிக்க அழகான சூழ்நிலையில்

அமைந்த எழிலான கிராமத்தில் ஸ்ரீனிவாச அண்ணனைப் பொலிவோடு பெற்றுத் திகழ்கிறது.

9) திருமலையைப் போன்றே இங்கும் பிரம்மோத்ஸவம் புரட்டாசி மாதமே நடைபெறுகிறது.

10) இப்பகுதி பலாசவனம் என்றும் அழைக்கப்படுகிறது.

